**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No :1/2021** **நாள் 12.06.2026**

**வாசா.1, திருமதி.வெள்ளைத்தாய்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார் -**

என் தாயார் 1, 2 எதிர்வாதிகளுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணப்படிக்கு பிராது 1வது தபசில் சொத்தில் 1 , 2 எதிர்வாதிகள் விவசாயம் செய்து வந்ததால் தமிழக வேளாண்மை துறையால் ஸ்ரீவில்லிபுத்தூர் விருதுநகர் மாவட்ட கூட்டுறவு வங்கியில் 1ம் எதிர் வாதி சேமிப்பு கணக்கு எண்.713249968 லும் 2ம் பிரதிவாதியின் சேமிப்பு கணக்கு எண்.712669213 லும் 02.02.2021ம் தேதி ரூ.3000/-ம் விவசாய மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் அது சரியல்ல. தெரியாது. அது போல் ஸ்ரீவில்லிபுத்தூர் கனரா வங்கி 1, 2 எதிர்வாதிகளின் கூட்டு வங்கி கணக்கு எண்.0922101058222 ல் 10.12.2020ம் தேதி உரம் மானியமாக ரூ.35,000/-ம் தமிழக வேளாண் துறையால் வழங்கப்பட்ட விபரம எனக்கு தெரியும் என்று சொன்னால் தெரியாது. பிராது 2ம் அயிட்ட சொத்தான ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள வீடானதை வழக்கில் உள்ள 2 ம் எதிர்வாதியானவர் கிரானைட் கல் பதித்து புதுப்பித்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் தெரியும். எனவே பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து 1, 2 எதிர்வாதிகளின் அனுபவத்திற்கு நான் ஆட்சேபனை எதுவும்செய்யவில்லை என்பதால் தாவா வழக்கு முரண்தடை தோஷத்திற்கு உள்ளாகியுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. பிராது 3ம் அயிட்ட சொத்தில் வழக்கில் உள்ள 2ம் எதிர்வாதிக்கும் பங்கு பாகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். பிராது 3ம் அயிட்ட சொத்தை பொறுத்தமட்டில் 2ம் எதிர்வாதிக்கு பங்கு பாகம் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. அதுபோல் பிராது 3ம் அயிட்ட சொத்தை பிரிப்பதில் 2ம் எதிர்வாதிக்கும் ஆட்சேபனையில்லை என்று சொன்னால் அது சரிதான். 1, 2 பிரதிவாதிகள் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணங்களின் அடிப்படையில் பிராது 1ம் தபசில் சொத்தை ஸ்ரீவில்லிபுத்தூர் கனரா வங்கியில் அடமானம் வைத்து பெற்ற கடனை திரும்ப செலுத்தாததால் கடனை திருப்ப கோரி வழக்கு நிலுவையில் இருந்த போது கனரா வங்கியில் இருந்து 1, 2 எதிர்வாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பியிருந்தார்கள் என்று சொன்னால் அனுப்பியிருந்தார்கள். அவ்வாறு கடன் தொகையை செலுத்தாததால் ஸ்ரீவில்லிபுத்தூர் கனராவங்கியினர் இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது 1, 2 எதிர்வாதிகளுக்கு எதிராக கடன் தொகையை செலுத்த வேண்டி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.52/2024 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் அது சரிதான். பிராது 1ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதியான விஸ்தீரணம் 9 ஏக்கர் 73 சென்டை 1, 2 எதிர்வாதிகள் கனரா வங்கிக்கு மேற்படி கடனுக்கு ஆதரவாக 11.04.2017ம் தேதியில் MOD எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கடனுக்கு ஆதரவாக 1, 2 எதிர்வாதிகளால் மேற்படி சொத்துக்குரிய செட்டில்மெண்ட் மற்றும் பட்டா போன்ற

ஆவணங்களை கனரா வங்கியில் அடமானம் வைத்திருந்தார்கள் என்று சொன்னால் அது சரிதான். இன்று வரையிலும் மேற்படி ஆவணங்களை 1, 2 எதிர்வாதிகள் வங்கியில் இருந்து பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். 1, 2 எதிர்வாதிகள் கனரா வங்கியில் பெற்ற கடன் மற்றும் MOD ஆகியவைகள் செல்லாது என்று நான் இவ்வழக்கில் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். மேற்படி கடன் தொகையை பயன்படுத்திக்கொண்டு தான் தென்னங்கன்று வைத்தும், சொட்டுநீர்பாசனம் வசதி,மின்வேலி ஆகியவைகளை போட்டு மேம்படுத்தி உள்ளார்கள் என்று சொன்னால் ஆமாம். என் தாயார் 1, 2 எதிர்வாதிகளுக்கு பிராத 1, 2 தபசில் சொத்துக்களை பொறுத்து நல்ல மனநிலையில் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணங்களை 1, 2 எதிர்வாதிகள் ஒப்புக்கொண்டு ஊர்ஜ்ஜிதத்திற்கு வந்துள்ளது என்றும் சட்டப்படி செல்லக்கூடியது என்றும் அவைகள் என்னையும் மற்ற சகோதரிகளையும் கட்டுப்படுத்தும் என்று சொன்னால் அது சரியல்ல. பிராது 1, 2 அயிட்ட சொத்துக்கள் 1, 2 எதிர்வாதிகளுக்கு மட்டுமே தனித்து பாத்தியப்பட்டு அவர்களின் தனித்த சுவாதீன அனுபவித்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனவே பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களின் பேரில் எனக்கு எந்தவிதமான பாகமும் கிடைக்கப்பெறாது என்றால் அது சரியல்ல. தாவா சொத்துக்கள் பொது அனுபவித்தில் உள்ளதாக நான் சொல்லவது பொய் என்று சொன்னால் அப்படியில்லை. அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. பிராது 2ம் அயிட்ட சொத்தை பேச்சியம்மாள் பெயரில் கிரையம் வாங்கியதாக நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கை பாரா 5ல் தவறாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. சீனியர் நீராத்துலிங்கத்துக்கு ஜுனியர் நீராத்துலிங்கம் வளர்ப்பு மகன் என்று நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் அது சரியல்ல. வழக்கில் உள்ள 2ம் வாதியானவர் எனக்கு பொது அதிகார ஆவணத்தை எழுதிக்கொடுத்ததாக சொல்லும் போது அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரிதான். எனவே 2ம் வாதியானவர் எனக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் அது சரியல்ல. பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து என் தாயார் 1, 2 எதிர்வாதிகளுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை 1, 2 எதிர்வாதிகள் பொய்யாக உற்பத்தி செய்துள்ளார்கள் என்று நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியில்ல. பிராது 3ம் அயிட்ட சொத்தை 1, 2 எதிர்வாதிகள் விற்பதற்கு முயற்சி செய்தார்கள் என்று நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் அப்படியில்லை. இவ்வழக்கின் 1ம் எதிர்வாதியானவர் நீதிமன்றத்தில் ஆஜராகி தாவா சொத்தில் தனக்குரிய பாகத்தை பிரித்துக்கொடுக்க வேண்டி எதிர்பாத்திய கோருரிமையை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். வங்கியில் இருந்து வாங்கிய கடனை 1, 2 எதிர்வாதிகள் தான் செலுத்தினார்கள் என்று சொன்னால் நான் தொகை ரூ.2 லட்சத்தை கொடுத்துள்ளேன். என் தங்கை உஷாராணிக்கு பதிலாக நான் தொகை ரூ.2 லட்சத்தை கொடுத்தேன். தொகை ரூ.2 லட்சத்தை நான் கொடுக்கவில்லை என்றும் 1, 2 எதிர்வாதிகளின்

சொந்த பணம் மூலமாக தான் வங்கி கடனை செலுத்தினார்கள் என்று சொன்னால் அப்படியில்லை. நான் தொகை ரூ.2 லட்சம் கொடுத்தேன் என்பதற்கு ஆவணம் எதையும் இல்லை என்று சொன்னால் வங்கி ஸ்டேட்மெண்ட் உள்ளது . வங்கி ஸ்டேட்மெண்டை நான் தாக்கல் செய்யவில்லை. வழக்கில் நாங்கள் செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரைக்கட்டணம் தவறானது என்று சொன்னால் அப்படியில்லை. பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து நாங்கள் கோரியுள்ள பரிகாரமும், அதுபோல வழக்கில் உள்ள 1ம் எதிர்வாதி கோரியுள்ள எதிர்பாத்திய கோருரிமை பரிகாரமும எங்களுக்கு கிடைக்ககூடியதாக இல்லை என்று சொன்னால் அது சரியல்ல பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களில் 1, 2 எதிர்வாதிகள் தவிர வேறு யாருக்கும் எந்தவிதமான உரிமையும், பாகமும், பாத்தியமும் அனுபமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. எனவே பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து பிராதை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல. பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து என் தாயார் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் விபரத்தை நான் வெளி நபர் மூலமாக தெரிந்துகொண்டதாக சொல்லும் போது அந்த நபர் யார் என்ற விபரத்தை நான் வழக்குரையிலும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 12th day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.